பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 12 புதன்கிழமை 30.11.2022 கதிர் 277

அமரகீர்த்தி அத்துகோரல கொலை:

## சந்தேகநபர் ஒருவர் சிறைக்குள் மரணம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரின் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் 2

# தட்டிக்கழிக்கப்பட்டதை தொட்டுப் பார்க்க தமிழ் மக்கள் ஒருபோதும் தயார் இல்லை

### மாவட்ட அபிவிருத்தி சபை குறித்த மைத்திரியின் கருத்துக்கு அமைச்சர் டக்ளஸ் இப்படி தக்க பதிலடி



பல தசாப்தங்களுக்கு முன்னர் தட்டிக்கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபையை தமிழ் மக்கள் தொட்டுப் பார்க்கக்கூடத் தயாராக இல்லை என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் இனம் தோற்று விட்டது என யாருமே கருதக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வாக மாவட்ட அபிவிருத்தி சபையை பரிசீலிப்பது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று நாடாளுமன்றில் தெரிக்கப்பட்டிருந்தது. 8



## கொழும்பில் பொலிஸாருடன் ஆர்ப்பாட்டக்காரர் சொற்போர்

கொழும்பில் இன்று அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நாடாளுமன்றத்துக்குச் செல்லும் பிரதான வீதிக்கு அருகில் பத்தரமுல்ல வழியில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் பலர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள், நாடாளுமன்றத்துக்குச் 2

## 2021ஆம் ஆண்டு கோட்டாவை விட அதிக பணத்தை வெளிநாட்டுப் பயணத்துக்குச் செலவிட்ட மஹிந்த

2021 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெளிநாட்டுப் பயணங்களை விட அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வெளிநாட்டுப் பயணங்களுக்காக அதிகபணம்செலவிடப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

சிங்களப் பத்திரிகை ஒன்றால், தகவல் அறியும் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 8



## மீண்டும் பிரச்சினையை தோற்றுவிக்க முயலாதீர்



### தமிழ் எம்.பிக்களுக்கு மைத்திரி எச்சரிக்கை

நாட்டில் மீண்டும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் வகையில் ஒரு சில கருத்துக்களைத் தூக்கிப் பிடிக்க வேண்டாம் என்று வடக்கு மாகாணத்திலுள்ள 8

வாள்வெட்டுத் தாக்குதலில்

## கணவன் கொலை; மனைவி படுகாயம்

காரில் வந்த இருவர் வாளால் வெட்டி தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் மனைவி காயமடைந்துள்ளார்.

ஹிக்கடுவை – வேவல பிரதேசத்தில் காலி – கொழும்பு பிரதான வீதிக்கு அண்மையில் ஆடை விற்பனை நிலையம் ஒன்றில் இன்று 2

## முல்லைத்தீவு இளைஞர் தேசிய ரீதியில் சாதனை




இலங்கை தேசிய யூடோ சம்மேளனம் நடத்திய யூடோ போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சாதனை படைத் துள்ளார்.

வடக்கு மாகாண யூடோ விளையாட்டுத்துறை வரலாற்றில் முதல் தடவையாக இந்தச் சாதனை 2

## வடக்கைச் சிதைக்கும் போதைப்பொருள்: விரைவில் முடிவு கட்ட அதிரடி நடவடிக்கை

### ஆளுநர் ஜீவன் தெரிவிப்பு



வடக்கு மாகாணத்தில் ஆறு விதமான போதைப்பொருட்களைப் பாவிக்கின்றார்கள். அதில் ஒன்று மட்டும்தான் கடல் வழியாக இங்கு வருகின்றது. ஏனைய போதைப் பொருட்கள் தரை வழியாக வருகின்றன. இதைப் பார்த்துக்கொண்டு நாங்கள் சும்மா இருக்க முடியாது. அதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து முன்னெடுப்போம்.

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வடக்கில் பூதாகரமாக மாறியுள்ள போதைப்பொருள் விற்பனை 2

## முட்டை விலை இனி 75 ரூபா?



எதிர்வரும் கிறிஸ்மஸ் காலத்தில் தட்டுப்பாடின்றி முட்டைகளை விநியோகிக்க முடியும் என்று அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அரசு தலையிடாவிட்டால் முட்டை ஒன்றின் விலை 75 ரூபாவைத் தாண்டும் என்று சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## திருமலையில் கோர விபத்து தங்கை பலி; அக்கா படுகாயம்

திருகோணமலை, புல்மோட்டை பிரதான வீதி, கும்புறுப்பிட்டிப் பகுதியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் பெண் தாதி ஒருவர் பலியாகியுள்ளார். அத்துடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நிலாவெளி பகுதியைச் சேர்ந்த குச்சவெளி வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் கீதாஞ்சனா தேவி (வயது 44) என்பவரே 2

## வடக்கைச் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் பாவனை தொடர்பில் 'Globe Tamil' இணையம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் போதைப்பொருள் விவகாரம் தொடர்பில் நாம் மிகவும் அவதானம் செலுத்தியுள்ளோம். இது மிகவும் துக்கமான விடயம்.

இங்கு சில ஆட்கள் – சில இளைஞ ர்கள் போதைப்பொருளை ஊசி மூலமும் உடலில் செலுத்துகின்றார்கள். தேசிக்காய் பானத்தையும் அதனுடன் சேர்த்து செலுத்துகின்றார்கள். இது மிகவும் மோசமான செயல்.

வடக்கில் ஆறு விதமான போதைப் பொருட்களைப் பாவிக்கின்றார்கள். அதில் ஒன்று மட்டும்தான் கடல் வழியாக இங்கு வருகின்றது. ஏனைய போதைப் பொருட்கள் தரை வழியாக வடக்குக்கு வருகின்றன. இது மிகவும் பெரிய பிரச்சினை.

நான் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குச் சென்று அங்கு போதைப்பொருள் பிரச்சினையால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைப்பட்டுள்ள இளைஞர்களைக் கண்டேன். அது ஓர் துக்கமான கதை.

வடக்குக்கு யார் போதைப்பொருள் கொண்டு வருகின்றார்கள், யார் விற்பனை செய்கின்றார்கள் என்பது தெரியக்கூடிய ஆட்களுக்குத் தெரியும். அது தெரிந்தால் அடுத்த கேள்வி அதைத் தடுக்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கின்றீர்கள் என்பதே.

இப்போதைக்கு நாங்கள் போதைப் பொருள் பாவனையாளர்களை அடையாளம் கண்டு கைது செய்து வருகின்றோம். போதைப்பொருள் விற்பனையாளர்கள் தொடர்பில் கைதான பாவனையாளர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

போதைப்பொருள் விற்பனையிலும் பிரச்சினை இருக்கின்றது. பணப் புழக்கம் அதைக்காட்டிக்கொடுக்கின்றது. அதனூடாகப் பலர் சிக்குவார்கள். எனவே, இந்த நடவடிக்கையை நாம் கைவிடமாட்டோம். போதைப்பொருள் விற்பனையாளர்களுக்குப் பின்னால் செல்வோம். அவர்களையும் கைது செய்வோம். வடக்கில் போதைப்பொருள் பிரச்சி னையை இலகுவாக நிறுத்த முடியாது. இந்தப் பிரச்சினை இங்கு மட்டும் இருக்கும் பிரச்சினை அல்ல. போதைப்பொருள் பிரச்சினை முழு இலங்கையிலும் இருக்கின்றது.

நான் முதல் சொன்ன மாதிரி ஒரு போதைப்பொருள்தான் கடல் வழியாக வடக்குக்கு வருகின்றது. ஏனையவை இலங்கையின் பல பகுதிகளிலிருந்து வடக்குக்கு வருகின்றன.

வடக்கில் ஒவ்வொரு நாளும் சராசரி 500 படகுகள் கடலுக்குப் போய் வந்தால் அவற்றில் குறைந்தது ஒன்றில் அல்லது இரண்டில் குறித்த போதைப்பொருள் வடக்குக்கு வருகின்றது.

இந்த நுட்பமான வலையமைப்பை இலகுவில் நிறுத்த முடியாது. இது மிகவும் பெரிய பிரச்சினை. எனினும், இதைப் பார்த்துக்கொண்டு நாங்கள் சும்மா இருக்க முடியாது. அதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து முன்னெடுப்போம் – என்றார்.

## முல்லைத்தீவு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலைநாட்டப்பட்டுள்ளது. தேசிய ரீதியில் இலங்கை தேசிய யூடோ சம்மேளனம் பொலனறுவை சர்வதேச உள்ளக விளையாட்டரங்கில் இம்மாதம் 25, 26, 27 ஆம் திகதிகளில் நடத்திய யூடோ போட்டியில் முப்படை வீரர்கள் மற்றும் தென்கிழக்கு வீரர்களுடன் 100 கிலோ கிராமுக்கு உட்பட்ட 7டைப் பிரிவில் போட்டியிட்டு முல்லைத்தீவு அளம்பில் பகுதியைச் சேர்ந்த செல்வன் ஜெயதாஸ் அல்வின் வெள்ளிப் பதக்கத்தை வென்று வரலாற்றுச் சாதனை படைத்து வடக்கு மாகாணத்துக்குப் பெருமைசேர்த்துள்ளார்.

இது தொடர்பாக பயிற்றுநரான வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.எஸ்.நந்தகுமார் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை தேசிய யூடோ சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டு பல தசாப்தங்களாகியிருந்தும் இதுவரை தேசிய மட்ட ரீதியில் நடத்தப்பட்ட யூடோ போட்டியில் வடக்கு மாகாணத்தில் இருந்து ஒரு வீரனும் பதக்கம் பெறவில்லை.

முதல் முறையாக முல்லைத்தீவு மாவட்ட யூடோ சங்கத்தின் வாயிலாக எனது பயிற்றுவிப்பினூடாக தனது அதீத திறமையால் இந்த வெற்றியை வென்ற வீரன் ஜெயதாஸ் அல்வினுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றார்.

## திருமலையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளும், பவுசரும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் தாதி உத்தியோகத்தரும், ஆசிரியையும் கடமைக்காகச் சென்று கொண்டிருந்தபோதே விபத்து இடம்பெற்றுள்ளது.

தாதியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த அவரது அக்காவான ஆசிரியை படுகாயமடைந்துள்ளார்.

குறித்த ஆசிரியை குச்சவெளி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொழும்பில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செல்லும் வீதியில் நுழையா வண் ணம் அப்பகுதியில் பெருந்திரளான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டிருந்தது. எனினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தை நோக்கிப் பேரணி யாகச் செல்ல முற்பட்டனர்.

அதேவேளை, பாதுகாப்புக் கட மையில் ஈடுபட்டுள்ள பொலிஸாருடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் கடும் வாக்கு வாதத்திலும் ஈடுபட்டனர்.

## கணவன் கொலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலை இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற பின்னர் குறித்த காரில் கொலையாளிகள் அங் கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்றும், சந்தேகநபர்கள் அடையாளம் காணப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த பெண், கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## சந்தேக நபர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்துள்ளார். அத்தனகல்ல நீதிமன்றில், அறிக் கையொன்றைச் சமர்பித்து, இந்த விடயத்தை சிறைச்சாலை அதிகாரி தெரிவித்துள்ளார். சந்தேகநபர் மஹர சிறைச்சாலையில் உயிரிழந்துள்ளமைக்கான வெலிசர நீதிவான் அறிக்கை மற்றும் சிறைச்சாலை அறிக்கை ஆகியவற்றை, சிறைச்சாலை அதிகாரி, அத்தனகல்ல நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளார். மஹர சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அன்டன் கேப்ரியல் என்ற சந்தேகநபரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திடீர் சுகயீனம் காரணமாக குறித்த சந்தேகநபர் உயிரிழந் துள்ளார் என்று சிறைச்சாலை அதிகாரி, நீதிமன்றில் தெரிவித்துள்ளார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரின் கொலைச் சம்பவம் தொடர்பில் 40 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 4 சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 36 சந்தேகநபர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் தொடர்பில் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பித்த நீதிவான், சந்தேகநபர்களை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.




40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்
douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha, Colombo 10
0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## மகா வம்ச மனவமைப்பு

மகாவம்ச மனவமைப்பில் சிக்குண்டு கிடக்கிறது தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரின வாதம். இப்போது அது குறித்து சற்று வித்தியாசமாகப் பேசப் புறப்பட்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இவ்விடயத்தை ஒட்டி சரியாக 17 ஆண்டுகளுக்கு முன்னர் – 2005 இல் – மாவீரர் தின உரையில் தமிழ் தேசியத் தலைவர் பிரபாகரன் சுட்டிக் காட்டியவை கவனிக்கத்தக்கவை.

“சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகில், புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும், சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்.

“அடிமனதில் ஆழமாக உறைந்து, அசைவற்றதாக இறுகிப் போன இந்தப் புராணக் கருத்து நிலையிலிருந்து சிங்களத் தேசம் விடுபடப்போவதில்லை. இந்தக் கருத்தியற் குருட்டுத்தனத்தால் இலங்கைத் தீவின் உண்மை வரலாற்றையும் அங்கு நிலவும் சமுதாய மெய்ந்நிலைகளையும் சிங்கள மக்களாலும் அவர்களது அரசியல், மதத் தலைமைகளாலும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

”இலங்கைத் தீவின் வடகிழக்கு மாநிலத்தைத் தாயகத் தேசமாகக் கொண்டு, தமிழீழ மக்கள் என்ற வரலாற்றுத் தொன்மைமிக்க ஓர் இனம் இருப்பதையும் அவர்கள் ஒரு தனித்துவத் தேசமாக வாழ்ந்து வருவதையும் அவர்களுக்கு அடிப்படையான அரசியல் உரிமைகள், சுதந்திரங்கள் உள்ளன என்பதையும் சிங்களவராற் புரிந்து கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

“தமிழரது இருப்பு நிலைபற்றிய உண்மையைக் கிரகித்து, அவர்களது அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொள்ளச் சிங்களத் தேசம் மறுத்து வருவதாலேயே தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்சினை தீர்வின்றி, முடிவின்றிச் சிக்கலடைந்து இழுபட்டு வருகிறது.

“சிங்கள மக்களின் மகாவம்ச மனவமைப்பில், அவர்களது சமூகப் பிரக்ஞையில், அவர்களது அரசியற் கருத்துலகில் அடிப்படையான மாற்றம் நிகழுமென நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள – பௌத்த மேலாண்மைவாதத்தின் வீச்சும் வலுவும் தணிந்து போகவில்லை. மாறாக, அது புதிய, புதிய வடிவங்களை எடுத்துப் புத்துயிர்பெற்று வருகிறது.” – என்றார் பிரபாகரன்.

இப்போது நேற்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஒரு கருத்தை கூறியிருக்கிறார்.

“மகா வம்சத்துடன் நாம் அறிந்த வரலாற்றில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. மகா வம்சத்தில் உள்ள திகதிகளை மாற்ற முடியாது. மகா வம்சத்திலும் ஒரு தரப்பினரின் கருத்துக்களே இருக்கின்றன. வெளியே வேறு கருத்துக்களும் இருக்கின்றன. இவற்றை கருத்திற்கொண்டு இலங்கை வரலாற்று ஆய்வு நிறுவனமொன்றை ஏற்படுத்த வேண்டும்.” – என்றார் ரணில். சரித்திரம் உண்மையாக எழுதப்பட வாய்ப்புக் கிட்டுமா?

# சேர் பொன்.இராமநாதனின் 92 ஆவது குருபூஜை தினம்!

## நேற்று யாழ்.பல்கலையில் அனுஷ்டிப்பு







சைவப் பெரு வள்ளலார் சேர் பொன் இராமநாதனின் 92 ஆவது குருபூஜை தினம் நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. குருபூசைதினத்தை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீபரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்து பரமேஸ்வரன் ஆலயத்தினுள் உள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சேர் பொன். இராமநாதனின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

ஆலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட மலர்மாலைகள் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத் தொகுதியின் முன்னால் உள்ள சேர் பொன்.இராமநாதனின் திருவுருவச் சிலை மற்றும் பல்கலைக்கழக சபை அறையிலுள்ள சேர் பொன்.இராமநாதனின் திருவுருவப் படம் ஆகியவற்றுக்கு அணிவிக்கப்பட்டன.

துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இராமநாதன் அறக்கட்டளையைச் சேர்ந்த பேராசிரியர் த.சிற்றம்பலம், இந்து கற்கைகள் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# 4 மாதங்களுக்குப் பின்னர் யாழில் எரிபொருள் வரிசை உருவானது!




யாழ்ப்பாணத்தில் சுமார் 4 மாதங்களுக் குப் பின்னர் எரிபொருள் வரிசை உருவாகியுள் ளது.

யாழ்.பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையில் நேற்று (செவ்வாய்க் கிழமை) மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்ட நிலையில், மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை அனைத்து விவசாயப் பகுதிகளுக்கும் மண்ணெண்ணெய் விநியோகம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய புதிய வேலைத்திட்டத்தின் கீழ், மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு நாளாந்தம் வழங்கப்படும் மண்ணெண்ணெய் பௌஸர்களின் எண்ணிக்கை சுமார் 45 ஆக அதிகரித்துள்ளதாகவும் இது 17 வீத அதிகரிப்பாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவன வெள்ளிவிழாவை முன்னிட்டு நேற்று நடைபவனி!




யாழ். உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு மாபெரும் நடைபவனி இடம்பெற்றது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து ஆரம்பமாகி குருநகர் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்துக்கு முன்னால் இந்த நடை பவனி நிறைவுற்றது.

இந்த பேரணியில் விரிவுரையாளர்கள், மாணவர்கள், உயர் தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அதேவேளை எதிர்வரும் 04.12.2022 அன்று தந்தை செல்வா கலையரங்கில் யாழ். உயர் தொழில்நுட்பவியல் கல்லூரியின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளமை குறிப்பிடதக்கது.

# அரசுக்கு எதிரான சீன மக்களின் போராட்டம் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையால் முடிவு



பீஜிங், நவ.30

சீனாவில் கடந்த சில வாரங்களாகவே கொரோனா தொற்று எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகின்றதன் காரணமாக அங்கு கொரோனா கட்டுப்பாடுகளை அரசு தீவிரமாக்கியது. தொற்று பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளில் பொதுமுடக்கம் அமுல்படுத்தப்பட்டு மக்கள் வீடுகளை விட்டு வெளியே வருவதற்கு தடை விதிக்கப்பட்டது. இதுதவிர பணியிடங்கள் கட்டுப்பாடு, பொருள்களை வாங்குவதில் கட்டுப்பாடு என பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதனால் மக்கள் கடும் அதிருப்தியில் இருந்து வந்த சூழலில் கடந்த 24 ஆம் திகதி ஜின்ஜியாங் மாகாணத்தின் தலைநகர் உரும்கியில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். கொரோனா கட்டுப்பாடுகளால் அந்த கட்டடம் பாதியளவு பூட்டப்பட்டிருந்ததால் மக்கள் உடனடியாக வெளியேற முடியாமல் தீயில் சிக்கி உயிரிழந்தாக குற்றம் சாட்டி மக்கள் போராட்டத்தில் குதித்தனர். பின்னர் இந்த போராட்டம் சீனாவின் பல்வேறு நகரங்களுக்கும் பரவியது.

கடந்த 4 நாள்களாக மக்கள் இரவு, பகலாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், பொதுமக்களின் கோபத்தை தணிக்கும் விதமாக அதிகாரிகள் நேற்று முன்தினம் சில கட்டுப்பாடுகளை தளர்த்தியிருந்தனர். இந்த நிலையில் சீனாவில் கொரோனா கட்டுப்பாடுகள் மற்றும் அரசுக்கு எதிராக நடந்து வந்த போராட்டங்களை அதிகாரிகள் நேற்று முழுவதுமாகக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

போராட்டங்கள் நடந்து வந்த அனைத்து நகரங்களிலும் அதிகாலை முதலே அதிக அளவில் பொலிஸார் குவிக்கப்பட்டு போராட்டம் நடத்த வீதிகளுக்கு வந்தவர்களை கலைந்து போகச் செய்தனர்.

மேலும், ஒரு சில நகரங்களில் பொதுமக்கள் தாமாகவே போராட்டத்தைக் கைவிட்டனர் எனச் சொல்லப்படுகிறது. அந்த வகையில் நேற்று சீனாவின் எந்தவொரு பகுதியிலும் போராட்டம் நடைபெறவில்லை எனத் தகவல்கள் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நேட்டோவின் உறுப்பினரே உக்ரைன் அதன். பொதுச்செயலர் திட்டவட்டம்!



புக்கரெஸ்ட், நவ.30

அமெரிக்கா, கனடா மற்றும் 28 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய உலகின் மிகப் பெரியஇராணுவக்கூட்டமைப்பான நேட்டாவில் இணைவதற்கு உக்ரைன் தயாராகி வந்த நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷ்யா போரைத் தொடங்கியது. அந்தப் போர் பத்து மாதங்களை கடந்தும் முடிவில்லாமல் நீண்டு வருகின்றது. இந்தப் போரில் நேட்டோ உறுப்பு நாடுகள் நேரடியாக பங்கேற்வில்லை என்ற போதிலும் உக்ரைனுக்கு இராணுவம், நிதி உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகின்றன.

இந்த நிலையில் போரில் ரஷ்யாவைத் தோற்கடிக்க உக்ரைனுக்கு கூடுதல் உதவிகளை வழங்குவது குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கன், ருமேனியா தலைநகர் புக்கரெஸ்ட்டில் நேட்டோ உறுப்பு நாடுகளின் வெளியுறவு மந்திரிகளுடன் ஆலோசனை நடத்தியிருந்தார். இந்த ஆலோசனை கூட்டத்தில் நேட்டோ அமைப்பின் பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் கலந்து கொண்டார்.

கூட்டத்துக்கு பின் அவர் பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில்–

நேட்டோவின் கதவு திறந்தே இருக்கிறது. இந்த அமைப்பில் சேர விரும்பும் நாடுகளை தடுக்கும் அதிகாரம் ரஷ்யாவுக்கு இல்லை. உக்ரைனை உறுப்பினராக சேர்ப்பதில் நாங்கள் இப்போதும் உறுதியாக இருக்கிறோம். ஒரு நாள், உக்ரைன் நேட்டோ அமைப்பில் உறுப்பினராகிவிடும். ஆனால் தற்போது போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனை ஆதரிப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. போரில் உக்ரைன் வெற்றி பெற வேண்டும் எனக் கூறினார்.



## சீனா - கட்டார் இடையில் இயற்கை எரிவாயு ஒப்பந்தம்

பெய்ஜிங், நவ.30

இயற்கை திரவ எரிவாயு கொள்முதல் மற்றும் விற்பனை ஒப்பந்தத்தில் சைனோபேக் மற்றும் கட்டார் எரிசக்தி கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்கள் கையெழுத்திட்டுள்ளன. இது தொடர்பாக காணொலி வாயிலாக நடைபெற்ற கூட்டத்தின் போது, சைனோபேக் நிறுவனத்தின் தலைவர் மாயோங் ரோங் மற்றும் கட்டாரின் எரிசக்தி விவகாரங்களுக்கான அமைச்சரும், கட்டார் எரிசக்தி கூட்டுத்தாபனத்தின் தலைவருமான ரத்–அல்–காபி ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பதமானது கட்டாரின் வடக்கு பகுதியின் திறன் விரிவாக்கத் திட்டத்தில் இருதரப்புக்கும் இடையிலான ஒருங்கிணைந்த ஒத்துழைப்பின் முக்கிய அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. அதே சமயம் இது சீனச் சந்தையில் இயற்கை எரிவாயு தேவையை பூர்த்தி செய்ய உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும் நோர்த் ஃபீல்ட் திறன் விரிவாக்க திட்டப் பணியின் முதலாவது எல்.என்.ஜி. கொள்முதல் மற்றும் விற்பனை ஒப்பந்தம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## 3 தசாப்தங்களின் பின் வெடித்த உலகின் மிகப் பெரிய எரிமலை!

வாஷிங்டன், நவ.30

அமெரிக்காவின் மேற்கே பசிபிக் பெருங்கடலையொட்டி அமைந்துள்ள ஹவாய் தீவில் அமைந்துள்ள மவுனா லோவா என்கின்ற உலகின் மிகப்பெரிய எரிமலையில் 38 ஆண்டுகளுக்கு பின்பு வெடிப்பு ஏற்பட்டுள்ளது. பெரிய அளவிலான நிலநடுக்கங்களை தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை இரவு எரிமலை வெடிப்புத் தொடங்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெடிப்பைத் தொடர்ந்து எரிமலையில் இருந்து நெருப்பு குழம்பு வெளியேறி வருகிறது. எனினும் அது தற்போது எரிமலை வாயின் விளிம்புகளுக்கு உள்ளாக முடிந்திருக்கின்றன என்றும், எனவே அது குறித்து அச்சுறுத்தல் தற்போதைக்கு இல்லை என்றும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதே சமயம் எரிமலை வெடிப்பு மிகவும் ஆற்றல் வாய்ந்ததாக இருக்கும் என்றும் நெருப்பு குழம்பின் ஓட்டம் விரைவாக மாறக்கூடும் என்றும் எச்சரித்த ஆய்வு மையம், எரிமலைக் குழம்பு குடியிருப்பு பகுதிகளை நோக்கிச் செல்லத் தொடங்கினால் அங்கிருந்து வெளியேற தயாராக இருக்குமாறு தீவில் வசிக்கும் சுமார் 2 லட்சம் மக்களை அறிவுறுத்தியுள்ளது. கடந்த 1843 ஆம் ஆண்டில் இருந்து இப்போது வரை 33 முறை சீற்றம் கண்ட மவுனா லோவா கடைசியாக கடந்த 1984 ஆம் ஆண்டில் வெடித்ததாகக் கூறப்படுகின்றது.



# இந்திய ரூபாயை இலங்கையில் பயன்படுத்த இந்தியா அனுமதி!




கொழும்பு, நவ.30

ஆசிய நாடுகளிடையே இந்திய ரூபாயை பிரபலப்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளதாகவும், அமெரிக்க டொலரைச் சார்ந்திருப்பதை குறைப்பதற்காக இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படு கின்றது. டொலர் பற்றாக்குறையால் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை, அதில் இருந்து மீள இந்திய ரூபாயை ஏற்றுக் கொள்ள முன்வந்துள்ளது. அதன்படி, இந்திய ரூபாயை வெளிநாட்டுப் பணப் பெறுமதியாக அறிவிக்குமாறு இலங்கை விடுத்த

வேண்டுகோளுக்கு இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் இந்திய ரூபாய் செல்லாது என்ற போதி லும், இலங்கை மக்கள் இந்திய மதிப்பில் ரூபா.8 லட்சத்து 10 ஆயிரம் மதிப்புள்ள இந்திய ரூபாயை வைத்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்திய ரூபாயை இலங்கையில் உள்ள வங்கிகளில் கொடுத்து, வேறு நாட்டு பணமாக

மாற்றிக் கொள்ள முடியும் என்பதுடன், இதற்காக வங்கிகளில் ’இந்தி ய ரூபா நாஸ்ட்ரோ கணக்குகள் தொடங்க இந்திய வங்கியுடன் இலங்கை வங்கிகள் ஒப்பந்தம் செய்து கொள்வது அவசியம் ஆகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேரளா, மும்பை உள்பட இந்தியாவில் பலருக்கு தட்டம்மை நோய்ப் பாதிப்பு!



கேரளாவில் குழந்தைகளை அதிகம் பாதிக்க கூடிய தட்டம்மை பரவல் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக மலப்புரம் மாவட்டத்தில் இதுவரை 160 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டு உள்ளது. எனினும், இந்த பாதிப்புகளால் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து, குழந்தைகளுக்கு தவறாமல் தடுப்பூசி போடப்பட்டு உள்ளது என்று பெற்றோர் உறுதி செய்து கொள்ள வேண்டுமென்று, கேரள அரசு வலியுறுத்தியுள்ளது. ஏனெனில் தட்டம்மை குழந்தைகளையே அதிகம் பாதிக்கிறது.

இதேபோன்று மத்திய சுகாதார அமைச்சகமும், பிறந்து 9 ம ாதம் முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு தட்டம்மை மற்றும் ரூபெல்லா கூடுதல் தடுப்பூசிகளை செலுத்துவது பற்றி அனைத்து மாநிலங்களும் பரிசீலனை மேற்கொள்ளும்படி இன்று கேட்டுக் கொண்டுள்ளது. இந்தத் தட்டம்மையானது, 6 மாதம் முதல் 3 வயது உடையோர் இடையே பரவலாக பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. எனினும், பருவ வயதினர் மற்றும் முதியவர்களிடமும் கூட இதன் பாதிப்பு காணப்படும். சமீபத்தில், கேரளா, குஜராத் மற் றும் ஜார்க்கண்டில் குழந்தைகள் இடையே தட்டமை பாதிப்பு அதிகரித்த சூழலில் ஆய்வு பணி மேற்கொள்ள மத்திய குழு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த மத்திய குழுக்கள் சம்பவ பகுதி க்கு நேரிடையாக சென்று பார்வையிடுவதுடன், நோய் பரவல் பற்றி ஆய்வு பணி மேற்கொண்டுவருகின்றது.

மேலும், மாநில சுகாதார துறைகளுடன் இணைந்து பணியாற்றி, பொது சுகாதார விடயங்கள், மேலாண் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும்ஒழுங்குமுறைகள் ஆகியவற்றுக்கு வேண்டிய உதவிகளையும் செய்யும் பணியில் ஈடுபடுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மராட்டியத்தில் இதுவரை மொத்தம் 717 பேருக்குத் தட்டம்மை பாதிப்பு உறுதியாகி உள்ளது. மும்பையில் 303 ஆக உள்ளது.

மொத்தம் 14 பேர் உயிரிழந்து உள்ளனர். இவற்றில் மும்பையில் இறப்பு எண்ணிக்கை 10 ஆக உள்ளது. மும்பையில் நேற்றுப் புதிதாக 5 பேருக்கு பாதிப்பு உறுதியானதுடன் சந்தேக உயிரிழப்பு ஒன்று பதிவானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது..

## இந்திய மாணவர்கள் இருவர் அமெ. ஏரியில் மூழ்கிப் பலி!



மிசோரி, நவ.30

அமெரிக்காவின் மிசோரி மாகாணத்தில் ஒஜார்க்ஸ் என்ற இடத்தில் வாரஇறுதி நாளில் நடந்த திருவிழா கொண்டாட்டத்தில் ஈடுபட்ட இந்தி யாவை சேர்ந்த 2 மாணவர்கள் அங்குள்ள ஏரியில் நீடராடும் போது நீரில் மூழ்கிப் பலியாகியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் அந்தப்பகுதி பொலி ஸார் தெரிவிக்கையில –

கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அவர்களில் ஒருவர் ஏரியில் குதித்து நீச்சல் அடித்துள்ளார். நீரின் ஆழத்திற்கு சென்ற அவர் பின்னர் மேலே வரவேயில்லை. இதனால், உடன் சென்ற அவரது நண்பர் பதற்றமடைந்து, நண்பரை காப்பாற்ற எண்ணியுள்ளார். உடனே அவரும் நீருக்குள் குதித்து அவரை தேடியுள்ளார். இந்த சம்பவத்தில் இருவரும் நீருக்குள் சிக்கி, உயிரிழந்து விட்டனர். என்று தெரிவித்துள்ளனர்.

தெலுங்கானாவை சேர்ந்த இருவரும் அமெ ரிக்காவில் உள்ள மாகாண பல்கலைக்கழகத்தில் முதுநிலைப் பட்டப்படிப்பு படித்து வந்துள்ளனர் என பொலிஸார் கூறியுள்ளனர். இது தொடர்பில் தெலுங்கானா அமைச்சர் கே.டி. ராமராவ் கூறும் போது, இந்திய மாணவர்களின் உடல்களை இந்தி யாவுக்கு விரைவாக கொண்டு வருவதற்கான உதவிகளை மேற்கொள்ளும்படி எமது குழுவினரை கேட்டு கொண்டுள்ளேன் எனத்வ்தெரிவித்துள்ளார்.

## போதைப் பொருடன் இந்திய எல்லைக்குள் நுழைந்த ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டது..!!



அமிர்தசரஸ், நவ.30

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் நகருக்கு அருகே இந்தியாபாகிஸ் தான் எல்லையை ஒட்டி அமைந்துள்ளசாஹர்பூர் கிராமத்தில் எல்லை பாது காப்பு படை வீராங்கனை கள்வழக்கம்போல்ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது, பாகிஸ்தானில் இருந்து ஒரு டிரோன், இந்தியப் பகுதிக்குள் நுழைவதைப் பார்த் துள்ளனர்.

உடனே 2 வீராங்க னைகள், டிரோன் மீது துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். 25 சுற்றுச் சுட்ட பிறகு டிரோன் கீழே விழுந்தது. அருகே சென்று பார்த்தபோது, டிரோன் சேதம் அடைந்து காணப்பட்டது.

மேலும், அதன் நிறை 18 கிலோ இருக்கும் எனவும், டிரோனில், 3.11 கிலோ எடையுள்ள போதைப்பொருள் ஒரு பொலித்தீன் பையில் சுற்றி வைக்கப்பட்டு இருந்ததாகவும் கூறப்படுகின்றது

அதை எல்லைப் பாதுகாப்பு படை கைப்பற்றி யுள்ளது. இதன்மூலம், இந்தியாவுக்குள் போதைப்பொருள் கடத்தும் முயற்சி முறியடிக்கப் பட்டது. அத்துடன், பஞ்சாப்பில் வடசீமா எல்லைப்புற காவல் நிலையம் அருகே மற்றொரு டிரோன் பறந்து வந்த நிலையில் எல்லை பாதுகாப்பு படையினர் துப்பாக்கியால் சுடத் தொடங்கியவுடன் பாகிஸ்தானுக்குள் திரும்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் வர்த்தக மற்றும் விற்பனைக் கண்காட்சி





(ஏ.எல்.எம். ஷினாஸ்)

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திகாமடுல்ல முயற்சியாண்மை வர்த்தக மற்றும் விற்பனை கண்காட்சி நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த வர்த்தகக் கண்காட்சியில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்தி பொருள்களை விற்பனை கூடாரங்கள் அமைத்து காட்சிப்படுத்தியிருந்தனர்.

நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் ஏ. ஆனந்தன், அம்பாறை மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவி பணிப்பாளர் எம்.ஐ.நாசர், நாவிதன்வெளி உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திருமதி.ஆர் லதாகரன், நிர்வாக உத்தியோகத்தர் கே. யோகேஸ்வரன், சமூர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எஸ். சிவம், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ். கலாயினி, பி .அஜ்ஜனா, கே. சசிவதனி உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

## சர்வதேச உளநல தினத்தை ஒட்டி மாணவர்களுக்கு பயிற்சி பட்டறை




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சர்வதேச உளநல தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியில் மாணவர்களுக்கான பயிற்சி பாசறை மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்ஷினி ஶ்ரீகாந்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் மாவட்ட உளவள அதிகாரி ஜனார்தனி நரசிம்மன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்களின் உளநலத்தினை மேம்படுத்துவதற்கும் அவர்களுடைய ஆளுமை மற்றும் திறமைகளை வெளிக்கொணர்வதற்குமாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சி பாசறை சிறப்பாக இடம் பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் வளவாளர்களினால் மாணவ, மாணவிகளுக்கு ஓவியம் வரைவதற்கான நுட்பமுறை மற்றும் ஆலோசனைகளை வழங்கப்பட்டமையுடன், பயிற்சியை நிறைவு செய்த மாணவ மாணவியருக்கு அதிதிகளினால் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப் பட்டன.

ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி.பத்மநாதன், அருவி பெண்கள் வாலையமைப்பின் பணிப்பாளர் திருமதி.மயூரிஜனன் மற்றும் மாவட்ட செயலக அலுவலக உதவியாளர் கே. எம்.ரிழ்லா, மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவின் இணைப்பாளர் ப.தினேஷ், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உளநல உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## சாய்ந்தமருதில் மாணவர்களை கடத்த முயன்றவர் கைதானார்

(பாறுக் ஷிஹான்)

பாடசாலை மாணவர்களைக் கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் அடையாளம் காணப்பட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரபல பாடசாலை மாணவர்களான 11 வயது மதிக்கத்தக்க இருவரை இரு வேறு சந்தர்ப்பங்களில் முகமூடி அணிந்த மர்ம நபர்கள் கடத்த முயற்சிக்கின்றனர் எனப் பொலிஸ் நிலையத்தில் இம்மாதம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

இதனை அடுத்து சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்த அதிரடி நடவடிக்கையின் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் குறித்த கடத்தல் சம்பவம் இடம்பெற்ற பகுதிகளில் உள்ள சி.சி.டி.வி. கமராக்களின் உதவிகள் மற்றும் புலன் விசாரணை முடக்கி விடப்பட்ட நிலையில் மாணவர்களை கடத்த முயற்சித்த சந்தேக நபர் கைதாகியுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபர் கல்முனை பகுதியை சேர்ந்த 27 வயதுடையவராவார். தலைக் கவசம் மற்றும் முகக்கவசம் ஆகியவற்றுடன் முகங்களை மூடியவாறு மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேக நபர்கள் மாணவர்கள் சிலரை இலக்கு வைத இவ்வாறான கடத்தல் முயற்சியில் ஈடுபட்டனர் என தெரிவிக்கப்பட்டு கடந்த வாரம் பல முறைப்பாடுகள் பதிவு செய்யட்டிருந்ததனர். சாய்ந்தமருது பொலிஸாரும் விசாரணையினை முடுக்கி விட்டிருந்தனர்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நேற்றுசெவ்வாய்க்கிழமை கல்முனை நீதிவான் முன்னிலையில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப் பட்டார்.

இவ்வடையாள அணி வகுப்பின் போது அச்சந்தேக நபரினால் பாதிக்கப்பட்ட மாணவன் ஒருவன் அடையாளப்படுத்தினான் என்று கூறப்படுகிறது. இதனையடுத்து சந்தேகநபரை எதிர்வரும் டிசம்பர் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். எல்.சம்சுதீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இளைய தலைமுறையினருக்கான வழிகாட்டல் மாநாடு நிந்தவூரில்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இளையதலைமுறையினருக்கான வழிகாட்டல் மாநாடு எதிர்வரும் டிசம்பர் மாதம் 3,ஆம் திகதி சனிக்கிழமை காலை 8:30 தொடக்கம் நிந்தவூர் அல் – அஷ்ரக் தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலை அதிபர் ஏ. அப்துல் கபூரின் பங்களிப்புடன் இடம்பெறும் இவ்விழாவில், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி என். புள்ளை நாயகம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார். அஸ்ஸெய்யத் றஸ்மி மௌலானாவின் ஒருங்கமைப்பில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீமின் தலைமையில் இடம்பெறுகின்ற இந்நிகழ்வில், புகழ்பூத்த ஒலிபரப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் பிரதம அதிதியாகவும் பிரதம பேச்சாளராகவும் கலந்து கொள்கிறார். அதிதிகளுடன் கலந்து சிறப்பிக்கும் இளையதலைமுறையினருக்கான இந்த மாநாட்டில் விரும்பியவர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டுக் குழுவினர் திறந்த அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்நிகழ்வின் நேரடி ஒலிபரப்பு அன்றைய தினம் காலை 10 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை எவ்.எம். அலைவரிசையில் ஒலிபரப்பாகும்.



# நாட்டைவிட்டு வெளியேறும் வைத்தியர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவார்களாம்!

## இப்படி எச்சரிக்கிறார் சுகாதார அமைச்சர் கெஹலிய



நாட்டைவிட்டு தேவையான அனுமதியைப் பெறாமல் வெளியேறும் வைத்தியர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவர் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மருத்துவ நிபுணர்கள் நாட்டைவிட்டுவெளியேறுவதைத் தடுக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கு ஐந்து வருட விடுமுறை காலம் வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானம் மருத்துவ நிபுணர்களுக்கும் பொருந்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, வெளிநாட்டுவேலை வாய்ப்புகளை நாடுவோர் தேவையான அனுமதியைப் பெற்று நாட்டைவிட்டுவெளியேற முடியும் என அவர் அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் நாட்டைவிட்டுவெளியேறுபவர்கள் சேவையிலிருந்து வெளியேறியவர்களாகக் கருதப்பட்டு கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மோட்டார்களைத் திருடிய மூன்று இளைஞர்கள் கைது!



சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஈவினை பகுதியில் உள்ள பண்ணை ஒன்றில் இருந்து கடந்த சில நாள்களுக்கு முன்னர் இரண்டு மோட்டார்கள் களவாடப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பண்ணையின் உரிமையாளர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். மேற்படி முறைப்பாடு சுன்னாகம் பொலிஸாரால் காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் திங்கட்கிழமை 18, 21 மற்றும் 25 வயதுடைய, ஈவினை பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்களைக் கைது செய்தனர். இதன்போது களவாடப்பட்ட மோட்டார்களும் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட மோட்டார்களுடன் சந்தேகநபர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸார் மோட்டார்களுடன் கைது செய்யப்பட்ட குறித்த மூவரையும், மீட்கப்பட்ட மோட்டார்களையும் பாரம் எடுத்தனர்.

அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். மீட்கப்பட்ட மோட்டார்கள் சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதி உடையவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வவுனியா நகரசபைக்கு புதிய செயலாளர் நியமனம்!



வவுனியா நகரசபையின் புதிய செயலாளராக திருமதி விமலவேணி நிசங்க தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) வவுனியா நகரசபையின் முதல் பெண் செயலாளராக அவர் தமது கடமைகளைப் பொறுப்பேற்று கொண்டார்.

திருமதி விமலவேணி, கிளி சென். தெரேசா மகளிர் மகா வித்தியாலய பழைய மாணவியும், பெரதெனியா பல்கலைக் கழக கலைமாணி பட்டதாரியும் ஆவார்.

இவர் வவுனியா வடக்கு வலயக்கல்வி, பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், நகரசபை ஆகிய இடங்களில் நிர்வாக உத்தியோகத்தராகவும், முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவையில் 16 வருடங்கள் சேவையாற்றியதுடன் அரச சேவையில் 28 வருடங்களாகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விதிமுறைகளை மீறி பால் மா இறக்குமதி செய்தமை நாடாளுமன்றில் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிக்கை



சுங்கத்தில் வைக்கப்பட்டிருந்த 6 பால் மா கொள்கலன்கள் தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்தார். இறக்குமதி மற்றும் ஏற்றுமதி விதிமுறைகளை மீறி குறித்த பால் மா இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். பால் மாவை இறக்குமதி செய்கிறோம் என்ற போர்வையில் இறக்குமதியாளர்கள் மூலப்பொருள்களை இறக்குமதி செய்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்தப் பிரச்சினை காரணமாக இந்த நாட்டில் பால் மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படாது எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# மருத்துவக் குணம் கொண்ட கஞ்சாவினை ஏற்றுமதிசெய்ய சட்ட நடைமுறைகள் தயார்!

## சிசிர ஜெயக்கொடி தெரிவிப்பு

ஆயுர்வேத திணைக்களத்தின் அங்கீகாரத்தின் கீழ் கஞ்சாவை ஏற்றுமதி தொழிலாக அபிவிருத்தி செய்வது தொடர்பான அனைத்து சட்ட நடைமுறைகளும் தயார் செய்யப்பட்டுள்ளன என சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதற்கமைய மருத்துவ குணம் கொண்ட கஞ்சாவை ஏற்றுமதித் தொழிலாக மேம்படுத்துவதற்கு நாங்கள் செயற்பட்டு வருவதோடு அதற்குத் தேவையான அனைத்து சட்ட நடைமுறைகளையும் நாங்கள் ஏற்கனவே தயார் செய்துள்ளோம்.

மேலும் வரவு – செலவுத் திட்ட விவாதத்தின் பின்னர் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# சுயதொழிலுக்கான கடைகள் 17 பேருக்கு நானுஓயாவில் உத்தியோகபூர்வமாக திறப்பு!







நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட நானுஓயா பிரதேசத்தில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் 17 பேருக்கு சுயதொழில் செய்யவென நுவரெலியா பிரதேச சபையால் அமைக்கப்பட்ட கடைகள் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை மத்திய மாகாண சபை மற்றும் நுவரெலியா பிரதேச சபை ஆகியன இணைந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட 80 லட்சம் ரூபாவில் இந்தக் கடைகள் நிர்மாணிக்கப்பட்டன.

நுவரெலியா – ஹற்றன் பிரதான வீதியின் ரதல்ல குறுக்கு வீதி சந்திக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த 17 கடைகளுக்கு மத்திய மாகாண உள்ளூராட்சி சபை 40 லட்சம் ரூபாவையும், நுவரெலியா பிரதேச சபை 40 லட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளது. இந்தக் கடைகளுக்கு மொத்தமாக 80 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. .மேற்படி நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் எஸ்.பி.ரத்நாயக்கா, மாகாண உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் யூ.பி.ஹேரத், டப்ளியூ.பி.விஜயவர்தன உட்பட சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துக்கொண்டனர்.

## 2021ஆம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, ராஜபக்ச சகோதரர்கள் இருவரும் மேற்கொண்ட 5 வெளிநாட்டு பயணங்களால் அரசுக்கு மொத்தமாக 4 கோடியே 47 இலட்சத்து 39 ஆயிரத்து 184 ரூபா 91 சதம் செலவு ஏற்பட்டுள்ளது.

அதில், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச இரண்டு வெளிநாட்டுப் பயணங்களுக்காக 3.6 கோடி (36,970,864.14) ரூபாவை செலவிட்டுள்ளதுடன், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மூன்று பயணங்களுக்காக 70 இலட்சம் ரூபாவை மாத்திரமே செலவிட் டுள்ளார்.

எவ்வாறாயினும் இந்தத் தகவல்களை வெளியிடுவதற்கு கடந்த ஜனவரியில், ஜனாதிபதி செயலகம் மறுப்புத் தெரிவித்திருந்தது.

எனினும், மேன்முறையீட்டுக்கு அமைய தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் 10 மாதங்களின் பின்னர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளன.

அதன்படி, முன்னாள் பிரதமர் மஹிந்தவின் உத்தியோகபூர்வ பயணங்களுக்கான செலவு மொத்த செலவில் 83 சதவீதமாகும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் செலவு 17 சதவீதமாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வின் நியூயோர்க் பயணத்துக்காக 5,461,221 ரூபாவும், இங்கிலாந்து (கிளாஸ்கோ) பயணத்துக்காக 1,785, 210 ரூபாவும், ஐக்கிய அரபு இராச்சிய பயணத்துக்காக 521,888 ரூபாவும் செலவாகியுள்ளது.

எவ்வாறாயினும், இந்தப் பயணங்களின் நோக்கம் ஜனாதிபதி செயலகத்தால் விளக்கப்படவில்லை. அவ்வாறே, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, பங்களாதேஷ் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் மற்றும் சேக் முகர்ஜி ரஹ்மானின் பிறந்தநாளில் கலந்து கொள்வதற்காக 2021 மார்ச் 19 அன்று மேற்கொண்ட பங்களாதேஷ் பயணத்துக்காக 10,568,962 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

ஜி – 20 சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 2021 செப்டெம்பர் 10 ஆம் திகதியன்று அவர் இத்தாலிக்கு மேற்கொண்ட பயணத்தின்போது 26,401, 901 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தில் அவரது குடும்ப உறுப்பினர்களில் சிலரும் கலந்துக் கொண்டனர். முன்னாள் பிரதமர் மற்றும் அவரது பிரதிநிதிகள் இத்தாலியில் உள்ள உணவு விடுதி ஒன்றில் உணவருந்தும் புகைப்படம் ஊடகங்களில் வெளியாகியிருந்த நிலையில், அது அப்போதைய அரசுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களையும் ஏற்படுத்தியது.

இந்தநிலையில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுடன் ஒப்பிடும் போது, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வெளிநாட்டுப் பயணங்களில், அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தனிப்பட்ட நண்பர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றமையே, பெருமளவு செலவு ஏற்படக் காரணம் எனத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் செயலாளர் காமினி செனரத், முன்னாள் வெளிவிவகார செயலாளர் ஜயநாத் கொலம்பகே ஆகியோர் பிரதமர் மஹிந்த மற்றும் அவரது மனைவி, மகனுடன் இத்தாலியில் உணவருந்து வதைக் காட்டும் புகைப்படமொன்றை தி கார்டியன் இணையத்தளம் வெளியிட்டிருந்தது.

நடைமுறையின்படி பிரதமர் வெளிநாட்டில் இருக்கும் போது, அவரது செயலாளர் நாட்டில் இருக்க வேண்டும். இது வெளியுறவு அமைச்சருக்கும் வெளியுறவுத்துறை செயலருக்கும் பொருந்தும்.

எனினும், இத்தாலி பயணத்தின் போது காமினி செனரத் பிரதமருடன் சென்றிருந்த அதேவேளை ஜயநாத் கொலம்பகேயும் வெளிவிவகார அமைச்சருடன் சென்றிருந்தார். எனினும், இரண்டு செயலாளர்களும் ஏன் இத்தாலிக்குச் சென்றனர் என்பது குறித்து எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

## மீண்டும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பிக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

–இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும்மு ன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது அவர் மேலும் கூறியதாவது:–

வடக்குப் பிரச்சினை, மாகாண சபைத் தேர்தல், அதிகாரப் பகிர்வு மற்றும் காணி விடுவித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் தற்போது கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. நான் ஜனாதிபதியாக இருந்தபோது, வடக்கில் மக்களுக்கு உரித்தான காணிகளில் 95 வீதத்துக்கும் மேல் விடுவித்தேன். தற்போது இரண்டு, மூன்று விகிதங்களே எஞ்சியுள்ளன. மாகாண சபைகளுக்கான அதிகாரம், அதிகரிக்கப்பட வேண்டும் என்ற விடயம் பல வருடங்களாக வலியுறுத்தப்பட்டு வந்தாலும், அது நடைமுறைக்கு வரவில்லை. எம்மைப் பொறுத்தமட்டில், மாகாண சபை முறைமைக்கும் கீழ் சென்றதொரு அதிகாரப் பகிர்வு அவசியம். அதாவது மாவட்ட அபிவிருத்தி சபை முறைமை உருவாக்கப்பட வேண்டும். ஜே.ஆர். ஜயவர்தன காலத்தில் இதற்கான முயற்சி எடுக்கப்பட்டது. மாவட்ட அபிவிருத்தி சபை முறைமைக்கு மேலதிகமாக நிதி செலவளிக்க வேண்டியதில்லை.

தற்போது உள்ள மாவட்ட அபிவிருத்திக் குழுவை, மாவட்ட அபிவிருத்தி சபையாக இயங்க வைக்கலாம். இது சம்பந்தமாக இந்தியாவுடன் நட்புறவு ரீதியில் பேச்சு நடத்தலாம். பிரச்சி னைகளை இலகுவில் தீர்க்கலாம். சண்டையிடத் தேவையில்லை.

இந்த நாட்டில் மீண்டும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் வகையில் ஒரு சில கருத்துக்களைத் தூக்கிப் பிடிக்க வேண்டாம் என வடக்கு மாகாணத்திலுள்ள எம்.பிக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். சகோதரத்துவத்துடன் செயற்படுவோம் – என்றார்.

## தட்டிக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறுகையில்,

தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை தீர்க்கும் வகையில், அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக, மாகாணங்களின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன.

அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாகைளை நிறைவேற்ற முடியும் என்பதையே நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். அதுவே அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைச் சாத்தியமான வழிமுறையாகவும் இருக்கின்றது.

இவ்வாறான சூழலில் 1980 களின் ஆரம்பத்திலேயே தமிழ் மக்களினால் ஏகோபித்த குரலில் தட்டிக்கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை தொடர்பாக பிரஸ்தாபிப்பதற்கு நாம் தயாராக இல்லை.

2009 ஆம் ஆண்டு இந்த நாட்டில் நிறைவடைந்த யுத்தம் என்பது, இலங்கை – இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர் சிலரால் முன்னெடுக்கப்பட்ட தவறான வழிமுறைக்கு கிடைத்த தோல்வியாகவே அனைவரும் கருத வேண்டுமே தவிர, தமிழ் மக்கள் தோல்வியுற்ற சம்பவமாக அதனை யாரும் கருதக்கூடாடது.

தமிழ் மக்கள் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் இருக்கின்ற சில இனவாத சக்திகள், தங்களின் அரசியல் நலன்களுக்காக, தமிழ் மக்கள் தோல்வியடைந்து விட்டார்கள் என்ற கருத்தின் அடிப்படையில் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இதுவே பிரச்சினைகள் இன்னும் தீராமல் இருப்பதற்கு காரணமாக இருக்கின்றது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்

எவ்வாறெனினும், தமிழ் மக்களின் நியாயமான நிலைப்பாட்டைத் தற்போதைய ஜனாதிபதி தெளிவாகப் புரிந்து வைத்திருக்கின்மை, பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரின் செயற்பாடுகளில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது –என்றார்.


# 2023 ஆம் ஆண்டிற்கான தனியார் பாதுகாப்பு சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான பெறுகை அறிவித்தல் பருத்தித்துறை நகரசபை

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** :- 2022.12.01 - 2022.12.15 வரை
மு.ப 9.30 தொடக்கம் பி.ப 3.00 மணி வரை

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி** :- 2022.12.16 பி.ப. 3.00 மணி வரை

**கேள்வி திறக்கும் திகதி** :- 2022.12.16 பி.ப. 3.00 மணி

**கேள்வி திறக்கும் இடம்** :- பருத்தித்துறை நகரசபை

1) பருத்தித்துறை நகரசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைகளுக்காகக் கோரப்படுகின்றன.
2) சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந் திருத்தல் வேண்டும்.
3) சேவை வழங்குநர்கள் குறித்த சேவையில் ஆகக்குறைந்தது 05 வருட அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்
4) மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்படிவக் கட்டணமாக ரூபா 2,000.00 (VAT நீங்கலாக) இனைச் செலுத்துவதுடன்ரூபவ் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ரூயஅஸ்ரீ;பா 5000.00 இனை பணமாக அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பபடிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
5) கேள்விப்பத்திர ஆவணங்கள் 2022.12.16 ஆந் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு தவிசாளர்து பருத்தித்துறை நகரசபை, கல்லூரி வீதி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
6) கேள்விப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகவே திறக்கப்படும். அதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக் கப்படுவர்.
7) கேள்விப்பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் மேல்மூலையில் மூலப்பிரதி, இணைப்பிரதி எனக் குறிப்பிடப்படுவதுடன் கேள்வியின் பெயரும் குறிப்பிடப்படல் வேண்டும்.
8) கேள்வி பத்திரங்கள் தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பெறுகைக்குழுத் தலைவருக்கே உரியதாகும்.
9) மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி இல;- 021 226 3213**

| இல | இல பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் எண்ணிக்கை 04 | | வேண்டப்படும் பாதுகாப்பு பிணை: பாதுகாப்புப் பிணை தொகை (மீளளிக்கக் கூடியது) | வேண்டப்படும் பாதுகாப்பு பிணை: செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| | | பகல் | இரவு | | |
| | 1) பருத்தித்துறை நவீன சந்தைக் கடைத்தொகுதியும் மரக்கறி சந்தையும் | 01 | 01 | 5,000.00 | 60 நாள்கள் |
| | 2) மூன்றாம் குறுக்கு தெருவில் உள்ள களஞ்சிய அறைக்கான இரவு காவல் கடமை (மாலை 6.00மணி முதல் அதிகாலை 6.00 மணி வரை) | | 01 | | |
| | 3) தும்பளைகிழக்கு சிறுவர் பூங்கா குவிற்கான காவல் கடமை (காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை) | 01 | | | |

30.11.2022

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,
பருத்தித்துறை நகரசபை.


விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்–
076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.11.2022 இல் வெளியிடப்பெற்றது.